





# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

**தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி**


**மலர் 1** **இதழ் 39** **24.09.2025**



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்

# முத்துக்கள்

ஒரு வைத்தியரை நோயாளி ஒருவன், உடம்புக்குக் கீரை நல்லதா?' என்று கேட்டான். அதற்கு வைத்தியர், உள்ளத்துக்குக் கீதை எவ்வளவு நல்லதோ, உடலுக்குக் கீரை அவ்வளவு நல்லது' என்று உடனே பதில் சொன்னார்.இதனால் பகவத் கீதையை ஸேவிப்பவர்களுக்கு மனத்திலுள்ள கலக்கங்கள் விலகி, சாந்தி ஏற்பட்டு, பரம புருஷார்த்தம் அநாயாஸமாகக் கிடைக்கும் என்பது மிக ப்ரஸித்தம் என்பது தெளிவாகிறது அல்லவா?

குருக்ஷேத்திரத்தின் பிரபாவம்

குருக்ஷேத்திரம் தர்மக்ஷேத்திரம். ஒரு நல்ல பூமியில் விதைத்த விதை பன்மடங்கு பலன் தருமாப்போலே குருக்ஷேத் திரத்தில் செய்த சிறிய தர்மமும் பன்மடங்கு பலன் தரும். 'காசியில், பூமியில் இறந்தவனுக்கு மோக்ஷம்:-ப்ரயாகையில் பூமியில் இறந்தவன், ஜலத்தில் மரித்தவன் இருவருக்கும் மோக்ஷம்: குரு க்ஷேத்திரத்தில் பூமி, ஜலம், ஆகாயம் இவற்றில் எங்கு மரணம் ஸம்பவித்தாலும் மோக்ஷம்' என்று பிரமாணம் பேசுகிறது. இதனால் காசி, ப்ரயாகை முதலிய க்ஷேத்திரங்களைக் காட்டிலும் குருக்ஷேத்திரம் மிகவும் சிறந்தது என்பது தெளிவாகிறது.

தர்மக்ஷேத்ரம் என்பதற்கு, "தர்மக்ஷயாத் த்ராயதே" என்கிற வ்யுத்பத்தியினாலே, "தர்மத்தின் நாசத்திலிருந்து (அதர்மத்திலிருந்து) காப்பாற்றும், என்று பொருள் கிடைப்பதனால், திருதராஷ்டிரன் ஸந்தேஹப்பட்டதற்குக் காரணம் என்ன என்பது தெளிவாகிறது.

'தேவாதிதேவனான பகவான், தன்னை அண்டின அர்ஜுனனிடம் உள்ள அன்பினால், ஸாதாரண மனிதனான அவனைவிடத் தன்னை மிகவும் தாழ்ந்தவனாக ஆக்கிக்கொண்டு, அவனுக்கு ஸாரதியானான்; என்னே ஆச்சரியம்!' என்று ஸஞ்ஜயன் விஸ்மிதனாகிறான்.

"பகவத்கீதையின் ஓர் அத்தியாயத்தையோ அதில் பாதியையோ ஒரு ச்லோகத்தையோ அதில் பாதியையோ அதிலும் பாதியையோ எவன் அன்புடனும் ச்ரத்தையுடனும் பாராயணம் பண்ணுகிறானோ அல்லது ச்ரவணம் செய்கிறானோ அவனும் ஸுசர்மா என்பவனைப் போல் அநாயாஸமாக ஸம்ஸார பந்தத் திலிருந்து விடுபடுகிறான் (பக்தி ப்ரபத்திகளில் ஒற்றைச் செய்து பரம்பரயா விடுபடுகிறான்) " என்றான் பகவான்.

ஸ்ரீமத் ராமாயணம் ஸகல தர்மங்களையும் நீதிகளையும் மனிதர்கள் அறிந்துகொள்ளவேண்டிய மற்ற விஷயங்களையும் தெரிவிக்கிற நூலாதலால் ஒவ்வொருவரும் இதனைப் படித்துப் பயன் பெறுதல் அத்தியாவசியமாகும்.

மிக்க பெருமைவாய்ந்ததும் புண்யத்தைத் தருவதுமாகிய சுவை மிக்க பெருமைவாயந்ததும் புண்யத்தைத் தருவதுமாகிய ராம சரிதையை வால்மீகிமகரிஷி ஆதியில் வடமொழியில் சொற் பொருட்சுவைகள் ததும்பப் பாடியருளினர். அது வடமொழிவல்லார்க்கன்றி ஏனையோர்க்குப் பயன்படாமையின், அறிஞர் சிலர் அதனைத் தென்மொழியாகிய தமிழிலே மொழி பெயர்த்து வெளியிடலாயினர்.

ஒரு கப்பலில் (ஓடத்தில்) வெளிநாடு செல்பவன் அந்த கப்பலானது நாம் சொல்ல வேண்டிய இடத்திற்கு நம்மை சேர்த்து விடும் என்ற நம்பிக்கையில் பயண காலத்திற்கு வேண்டிய உணவுகளை எடுத்துச் செல்கிறான். அந்த ஓடத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை வைகுந்தன் என்பதோர் தோணியான எம்பெருமான் மீது வைக்க வேண்டாமா? என்று அருளிச் செய்கிறார். இப்படி பகவானுடைய கருணையே போதுமானது ப்ரபத்தி செய்ய வேண்டிய அவசியமில்லை என்று அபிப்ராயம் சரியன்று.

நித்ய யோகத்திலிருந்துகொண்டு, என்னிடத்தில் முழு பக்தியுடையவனாக இருப்பவனே ஜ்ஞானி. அவனே எனக்கு மிகவும் ப்ரியமானவன். ஆகையினால் பக்தி ஸ்வரூபம் ஒருபோதும் விரோமில்லை. அப்படியென்றால் ப்ரபத்தி தேவையில்லை. பக்தியே போதுமானது என்று கூறலாமா? என்றால் இன்றைய காலகட்டத்தில் பக்தியோகம் பண்ணுவதற்கு ப்ரசக்தியில்லாமையால் ப்ரபத்தி உபாயத்தை அநுஷ்டிப்பது அவசியமானது என்று சாஸ்த்ர ப்ரமாணங்களாலும், ஆழ்வார்கள், பூர்வாசார்யர்கள் (இருகலையார்) வ்யாக்யானங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளன. அதனால் ப்ரபத்தியை அவச்யம் அநுஷ்டிக்க வேண்டும்.

**********************